**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 1098/அ1/2025, நாள். .03.2025**

---

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப் பணி – இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் / சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை –III ஆகியோர்களுக்கு உதவியாளராகப் பதவி உயர்வு / பணிமாறுதல் வழங்குவது –15.03.2025 நிலவரப்படி தகுதி பெற்றவர்கள் – விவரம் கோருதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை எண்.97. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள். 14.02.1996.
2. அரசாணை எண்.16, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.21.02.2002.
3. சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.012828/அ4/இ3/2025–1, நாள்.05.03.2025.

-----

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களுக்கு உதவியாளர் பதவி உயர்வு மற்றும் அரசாணை எண் 34, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.21.02.2001–இன்படி சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை – III லிருந்து உதவியாளர்களாகப் பணி மாறுதல் வழங்குதல் சார்ந்தும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 13A இன் படி 15.03.2025 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதிவாய்ந்த நபர்கள் விவரங்களை அனைத்து சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெற்று தேர்ந்தோர் பெயர்பட்டியல் வெளியிட்டு பதவி உயர்வு/பணி மாறுதல் வழங்கப்பட வேண்டியுள்ளது.

15.03.2025க்குத் தகுதிபெற்ற நபர்கள் (2007–2013 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி – IV மூலம் தெரிவு பெற்றவர் வரை மற்றும் கருணை அடிப்படை / பதவி உயர்வு நியமன முறை எனில் 30.04.2013 பணிவரன் முறை நாள் வரை) மற்றும் 3 ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வினைத் தற்காலிகமாக துறந்தவர்கள் (Relinquishment) இருப்பின் அவர்களை 15.03.2025 தேர்ந்தோர் பெயர்பட்டியலில் சேர்க்க ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு வேலூர் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) , உடற்கல்வி ஆயவாளர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி 14.02.1906 மற்றும் அதற்குப்பின் இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்தல் கட்டாமாக்கப்பட்டுள்ளது. பார்வை –2 ல் காணும் அரசாணையின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 30ல் தெரிவித்துள்ளவாறு உதவியாளர் பதவி உயர்வு பெறத் தகுதியுள்ள தட்டச்சர்கள் 15.03.2025 அன்றைய தேதியிலோ அல்லது அதற்கு முன்போ ஒரு வருட காலம் இளநிலை உதவியாளர் பயிற்சியினைப் பெற்றுள்ளார்கள் என்பதற்கான சான்றினை அன்னார் பணிபுரியும் அலுவலகத் தலைவரிடம் பெற்று இணைத்தல் வேண்டும். இந்த அறிவுரைகளைப் பின்பற்றி முன்னுரிமைப் பட்டியலுக்கான விவரங்கள் அனுப்புதல் வேண்டும் என பார்வை –3ல் காணும் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி 30.04.2013 அன்றைய நாள் வரை பணிவரன் முறை செய்யப்பட்ட ஒவ்வொரு பணியாளர் சார்பான விவரங்களை தனித்தனியாக விவரப்படிவம் அனைத்து கலங்களும் பூர்த்தி செய்து அதற்குரிய ஆவணங்களுடன் இணைத்து சரிபார்த்து மேலொப்பம் இட்டு 19.03.2025 பிற்பகல் 4.00 மணிக்குள் இரண்டு நகல்களில் நேரில் ஒப்படைக்குமாறு வேலூர் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்), உடற்கல்வி ஆயவாளர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு :**

1. படிவம் (15.03.2025 நிலவரப்படி இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு முழுத் தகுதி பெற்றவர்கள் விவரம்.
2. ஆவணங்கள் இணைக்க வேண்டிய படிவம்.

**//ஒப்பம்//**
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

**பெறுநர் :**

1. வேலூர் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்), வேலூர்.
3. உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு.

**நகல் :**

கோப்பிற்கு.

(பா.க)

| வ.எண் | வரிசைப்படுத்தி மேலோப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | படிவம். | |
| 2 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒதுக்கீட்டு ஆணை நகல் பணியாளரின் பதிவெண் தெளிவாக இருத்தல் வேண்டும். | |
| 3 | பணிநியமன ஆணை நகல். | |
| 4 | பணிவரன்முறை ஆணை நகல். | |
| 5 | பவானி சாகர் அடிப்படை பயிற்சி நிறைவு செய்து தேர்ச்சி பெற்ற சான்றிதழ் நகல். | |
| 6 | தகுதிகாண் பருவம் முடித்த ஆணை நகல். | |
| 7 | தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெற்ற நகல் (Bulletin Copy) | |
| 8 | சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் பாகம் –1 தேர்ச்சி பெற்ற நகல் (Bulletin Copy) | |
| 9 | தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை நிருவாக அலுவலர் தாள்–1 / பள்ளித் துணை ஆய்வாளர் தேர்வு தாள்–1 தேர்ச்சி பெற்ற நகல் (Bulletin Copy). | |
| 10 | தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை நிருவாக அலுவலர் தாள் –2/ பள்ளித் துணை ஆய்வாளர் தேர்வு தாள்–2 தேர்ச்சி பெற்ற நகல் (Bulletin Copy). | |
| 11 | SSLC தேர்ச்சி பெற்ற சான்றிதழ் நகல் /தமிழ் அல்லாத பிறமொழி தேர்ச்சி பெற்றவர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெற்ற நகல் (Bulletin Copy). | |
| 12 | சம்மந்தப்பட்ட பணியாளர் மீது நாளது தேதிவரை ஒழுங்கு நடவடிக்கை நிலுவை விவரம்/ ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டிருந்தால் அவ்விவரம் நியமண அலுவலரான மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் தெரிவிக்கப்பட வேண்டும். | |
| 13 | மூன்றாண்டுகளுக்கு முன்பு தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு துறந்திருப்பின் அவ்வாணை நகல். | |
| 14 | தட்டச்சராக பணிபுரியும் பணியாளராக இருப்பின் ஒருவருடம் இளநிலை உதவியாளர் பயிற்சி பெற்ற சான்றிதழ் நகல். | |
| 15 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு பெற்ற பணியாளர் என்றால் REVISED SENIORITY AS PER MERIT மட்டுமே குறிப்பிட்டு அதன் நகலினை இணைக்கப்பட வேண்டும். | |
| 16 | சம்மந்தப்பட்ட பணியாளரின் தற்போதைய பணியிடத்தின் நிலை அலுவலரால் குறிப்புரை வழங்கப்பட வேண்டும். | |

மேலொப்பம்.